Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.270/2023, Cr.No.32/2021, Kandili PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.8, Page.No.

| | |
|---|---|
| பெயர் | கணேசன் |
| வயது | 35 |
| தந்தை/கணவர் பெயர் | மணி |
| தொழில் | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம்/பணிபுரியும் இடம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 ) on the 07th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 11.57 AM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.20 PM

<u>முதல் விசாரணை</u>.- (எதிரி ஆஜர்)

நான் தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வசந்தகுமார் என்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டு கடந்த 28.08.2022 அன்று நான் கந்திலி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம் சிப்காட் காவல் நிலையத்திலிருந்து வரப்பெற்ற தகவலில் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை வாகன சோதனையின் போது, திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் சிப்காட் காவல் உதவி ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாக தகவல் கிடைத்தது. அதன்படி 29.08.2022 அன்று சிப்காட் காவல் நிலையம் சென்று இவ்வழக்கு சொத்து மற்றும் தொடர்புடைய ஆவணங்களை உரிய

வேண்டுகோள் கடிதம் மூலம் பெற்றேன். பின்னர் அன்றைய தினம் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் கிருஷ்ணப்பா மற்றும் சீனப்பா ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சொத்தை படிவம்–91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம்–91 முறையே அ.சா.ஆ.14 மற்றும் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை சம்பிரதாய கைது செய்ய நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்திருந்த நிலையில் எதிரி நீதிமன்ற பிணையில் சென்று விட்டதால் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 16.09.2022 அன்று பகல் 12.00 மணியளவில் எதிரி ஓசூர் பேருந்து நிறுத்தத்திடம் இருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின்படி எதிரியை அன்றைய தினம் காரணம் கூறி கைது செய்து பகல் 14.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து உரிய ஆவணங்களை பதிவு செய்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் என்னுடைய புலன் விசாரணையை முடித்து 20.09.2022 அன்று எதிரி மீது இறுதி அறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் வாகனம் களவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் களவு செய்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை, ஆனால் எதிரி தான் வாகனத்தை ஆஜர் செய்துள்ளார். நான் தவறுதலாக எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வாகனத்தை திருடியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டு நபர்கள் யார் என்று நான் என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் எதிரிதான் என்று தெரிய வந்தது, மற்றொரு நபர் யாரென்று தெரியவில்லை. சிறப்பு உதவி ஆய்வாளர் என்னிடம் எப்போது வழக்குக் கோப்பை ஒப்படைத்தார் என்றால் 28.08.2022 அன்று இரவு நேரம். அது இரவு நேரம் என்பதால் நான் சிப்காட் காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கின் ஆவணங்களை பெற்று இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, மறுநாள் தான் நான் சென்றேன். கைப்பற்றப்பட்ட

வாகனங்கள் பதிவு எண் இல்லாத வாகனங்கள் என்றால் சரிதான், ஆனால் நீதிமன்றத்தில் படிவம்–91 ன் மூலம் பதிவு எண் உள்ள வாகனத்தினை ஒப்படைத்துள்ளேன் என்றால் அதிலுள்ள வாகனத்தின் எண் எழுதிய கையெழுத்து என்னுடையது அல்ல. நீதிமன்றத்தில் பதிவு எண் உள்ள வாகனத்தினை ஒப்படைத்துள்ளேன் என்றால் நான் ஒப்படைத்தபோது அந்த வாகனத்தில் பதிவு எண் இல்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வாகனத்திற்கும் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வாகனத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளிடம் வாகனம் கிடைத்தப்பின்னர் மறுவிசாரணை செய்தேனா என்றால் அவர்கள் முன்னர் கூறியதையே கூறியதால் பதிவு செய்யவில்லை. சிப்காட் காவல் நிலையத்தில் வாகனத்தினை பெற்றபோதே சாட்சிகளை விசாரித்தேனா என்றால் வாகனத்தை பெற்ற அன்றே விசாரித்தேனா என்று ஞாபகமில்லை, ஆனால் நான் விசாரணை செய்தேன். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.270/2023, Cr.No.32/2021, Kandili PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7, Page.No.

| | |
|---|---|
| பெயர் | வசந்தகுமார் |
| வயது | 56 |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தராஜ் |
| தொழில் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம்/பணிபுரியும் இடம் | ஏலகிரி மலை |
| மாவட்டம் | வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 ) on the 07th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 10.59 AM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 11.07 AM

**முதல் விசாரணை.- (எதிரி ஆஜர்)**

நான் தற்போது ஏலகிரி மலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.02.2021 அன்று காலை 07.00 மணியளவில் கந்திலி காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது சத்தியராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்தப் புகாரினைப் பெற்று கந்திலி காவல் நிலையக் குற்ற எண்.32/2021 இ.த.ச. பிரிவு 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், அன்றைய தினமே காலை 07.30 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் ராஜன் மற்றும் சரவணன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே**

**அ.சா.12 மற்றும் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காக வழக்கு கோப்பை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

சம்பவம் 07.02.2021 அன்று நடைபெற்றது. எனக்கு தகவல் கிடைத்த தேதி 11.02.2021. ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அனைத்தும் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.